## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### விவசாயப் பிரிவு

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2024*

*தற்போது வெற்றிடமாகியுள்ள கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு இணைப்புச் செய்வதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து போட்டிப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

01. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

1. **கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் :** *இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் கால்நடை வைத்திய அதிகாரியாக 2018 ஆ ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நியமனம் பெற்றிருத்தல் நிரந்தர சேவைக் காலத்தையும் கொண்டிருத்தல் அத்துடன் உரிய மிருக வைத்திய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்பினை முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் நிலை) மட்டத்தில் சித்தியடைந்து இருத்தல்.*

2. **ஆராய்ச்சி உத்தியோகத்தர் :** *இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் கால்நடை வைத்திய அதிகாரியாக அல்லது கால்நடை உத்தியோகத்தராக 2018 ஆ ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நியமனம் பெற்றிருத்தல் அத்துடன் திருப்திகரமான நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் அத்துடன் உரிய மிருக வைத்திய விஞ்ஞானம் /கால்நடை வளர்ப்பு விஞ்ஞானம்/விவசாய விஞ்ஞானம் தொடர்பில் நான்கு வருட பட்டப்படிப்பினை முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் நிலை) மட்டத்தில் சித்தியடைந்து இருத்தல்.*

* *மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் இரண்டின் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

1. *முன்னைய வருடங்களில் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படுத்தப்படாது இருத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படாது இருத்தல் வேண்டும்.*

2. முன்னைய வருடங்களில் சம்பள ஏற்றங்களை அடைந்து இருத்தல்.

02. நீங்கள் இந்தப் பதவியின் பொருட்டு விண்ணப்பம் செய்ய எதிர்பார்ப்பதாயின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பூரணப்படுத்தி 2024.09.18 ஆந் திகதிக்கு முன்னர் கால்நடை சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கத்தக்கவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 06 வரையிலான தகவல்கள் முதலாம் பக்கத்திலும் ஏனைய தலைப்புக்கள் முறையாக அடுத்த பக்கத்தில் அமையுமாறு A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறப்பிடப்படல் வேண்டும்.

03. கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பதாரர் ஆளடையாளத்தை உறுதி செய்வதன் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய கடவுச்சீட்டை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 இனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான பணிமனையில் சிறாப்பரிடம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கத்திற்கு வரவு வைத்து தீவின் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக்கொள்கின்ற பற்றுச்சீட்டை அல்லது பற்றுச்சீட்டின் தெளிவான நிழற் பிரதி ஒன்றினை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி விடுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது காசு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் கட்டணம் எந்தக் காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மற்றும் செய்யவோ முடியாது.

கணக்கு உரிமையாளரது பெயர் : கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகம்

வங்கி : மக்கள் வங்கி, பேராதனை கிளை

கணக்கு இலக்கம் : 057-100179037275

04. பரீட்சையின் பொருட்டு அனுமதி அட்டை அனுப்பி வைத்ததன் பின்னர் விண்ணப்பதாரர் எவரேனும் ஒருவருக்கு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பத்தின் மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிக்க முடியும். சகல பரீட்சை விண்ணப்பதாரர்களும் உரிய பரீட்சை மண்டபத்திற்கு அனுமதி அட்டையில் கையொப்பத்தை சான்றுபடுத்தி பரீட்சை மண்டபத்திற்கு வருகை தரும் முதலாவது நாளில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்ட திட்ட ஒழுங்கு விதிகளுக்கு விண்ணப்பதாரர் உட்படுவர்.

05. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் கொழும்பில் நடாத்தப்படும்.

06. எழுத்து மூல போட்டிப் பரீடசையில் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். பெறுபேற்றுக்கு அமைய நிலவும் வெற்றிடத்துக்கு ஏற்ப அதிக புள்ளிகளைப் பெறுகின்ற உத்தியோகத்தர்களது திறமை வரிசைக்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் வழங்கப்படும். (பாடவிதானம் இணைப்பு 02 இல் தரப்பட்டுள்ளன).

07. மேலும் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தராக அல்லது ஆராய்ச்சி உத்தியோகத்தராக மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேற்றுக்கு அமைய நியமனம் பெற்றதன் பின்னர் மீண்டும் கால்நடை வைத்திய அதிகாரி/கால்நடை உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு நியமிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்பதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய,

செயலாளர்,
கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு.

2024, ஓகத்து 12.